بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 6:10 ரஜப் 1431 பக்கங்கள் = 12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email: suvanam@gmail.com, www.suvanam.com

# கருப்பை சுதந்திரம் பெண்ணுரிமையா?

சுவனப்பாதை மாதஇதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சி போட்டியில் (ஹிஜ்ரி 1430)

*ஆறாவது ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை.*

*- ஹஜ்ஜா சபியா கரீம் MA; B Sc; B Ed வாடி சோபியா கல்லூரி மலேசியா*

இதை நிராகரிப்பதற்கு அபூர்வமான ஏழாவது அறிவு தேவையில்லை!.

அவனே தான் படைத்துள்ள ஒவ்வொரு பொருளையும் அழகாக்கினான். இன்னும், அவன் மனிதனின் படைப்பைக் களிமண்ணிலிருந்து ஆரம்பித்தான். பிறகு அற்பத் துளியாகிய (இந்திரிய) சத்திலிருந்து, அவனுடைய சந்ததியாய் உண்டாக்கினான். பிறகு அவன் அதை சரிசெய்து அதனுள்ளே தன் ரூஹிலிருந்தும் ஊதினான். இன்னும் உங்களுக்கு அவன் செவிப்புலனையும், பார்வைப்புலனையும், இருதயங்களையும் அமைத்தான் (இருப்பினும்) நீங்கள் நன்றி செலுத்துவது மிகச் சொர்ப்பமேயகும்' (அல்குர்ஆன் 32:7-9)

இதை உணர்வதற்கு அபூர்வமான ஏழாவது அறிவு தேவையில்லை. மிகவும் எளிதான ஒரு நியாய விதியை உறுதியாக உண்மை கொண்டால் போதும். இந்த உடலையும் அதில் ஐம்புலங்களையும் மற்ற அவயங்களையும் படைத்தவன் அவன். அதற்கும் மேலாக அந்த உடம்பிற்கு தன்னிலிருந்து ரூஹையும் கொடுத்தவனும் அவனே. ரூஹ் இல்லாமல் எந்த அவயமும் இயங்க முடியாது. படைத்தவனுக்கே படைக்கப்பட்டவை அனைத்தும் இந்த உலகம், பூமி, வானங்கள், அவைகளின் மீது இருக்கும் அத்தனையும் அவற்றை படைத்த அல்லாஹ்விற்கே சொந்தம். இதில் மாறுபட்ட கருத்திற்கு வேலை இல்லை, வழியும் இல்லை. இதில் ஒரு வேடிக்கையான ஆனால் மறுக்க முடியாத உண்மை என்னவென்றால் நாம் வைத்திருக்கும் பொருளை

(என் பேனா, என் சட்டை, என் புத்தகம்.....என்று) இயற்கையாக உரிமை கொண்டாடிவிடுவோம்.

*தொடர்ச்சி 5 ம் பக்கம் பார்க்க ...*

# சவூதியில் வாகன ஓட்டுனரா நீங்கள்?

சவூதி அரேபியாவில் பணிபுரியும் நீங்கள் சொந்தமாக வாகனம் வைத்திருக்கிறீர்களா?

அல்லது வாகன ஓட்டுனரா? நீங்கள் தெரிய வேண்டியவைகள் சில...

கடந்த சில தினங்களுக்கு முன் எனது அலுவலகத்தில் பணியாற்றும் சக பணியாளர்கள் சிலருக்கு ஒரே நேரத்தில் போக்குவரத்து விதிமுறைகளை மீறியதற்கான அபராத தொகை விதிக்கப்பட்டு அலுவலக தொலைநகல் மற்றும் மின் அஞ்சல் முகவரிக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்று அதிர்ச்சி அடைந்தோம் காரணம் அந்த விதி மீறல் பற்றி அந்த வாகன ஓட்டுனருக்கு தெரிந்திருக்க வில்லை. அவர் வாகனத்தில் மிதமாகச் சென்றதாகச் சொன்னார் ஆனால் மெதுவாக (140 kmph க்கு மேல்) பறந்திருக்கிறார். அந்த வாகனம் அரசு துறைக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது, ஆனாலும் விதிமுறைகளுக்குட்பட்டதல்லவா? உடனே துறையிலிருந்து அறிக்கை வெளியிடப்பட்டது துறைசார்ந்த பணிகளுக்கு வாகனங்களை பயன்படுத்து வோர் விதி முறைகளுக்குட்பட்டு வாகனங்களை ஓட்ட வேண்டும் மீறினால் அபராதத்தொகையை அவரது சம்பளத்திலிருந்து வெட்டப்படும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உடனே நமது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

சவுதி அரேபியாவின் உள்துறை அமைச்சகம் போக்குவரத்து கட்டுப்பாட்டு முறைகளை அதிநவீனமயமாக்கி உள்ளது அது போல் குற்றங்களுக்காக அபராதமும் கடுமையாக்கப்பட்டுள்ளது அது பற்றிய ஒரு பார்வை.

சவூதி அரேபியாவின் முக்கிய 8 நகரங்கள்

## உள்ளே!

சங்கதிகளும் இங்கிதங்களும் - 3
இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 8
சிந்திக்க சில வரிகள் – 9
மனைவி கணவனுக்கு செய்யும் கடமைகள் - 10
இறை நினைவுகள் - 12
அறிவுப் போட்டி - 12

போக்குவரத்து கண்காணிப்பு முறைகளை டிஜிட்டல் மயமாக்கியுள்ளது அதன் மூலம் போக்குவரத்து குற்றங்களை குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த வகையில் அதிக வேகம் செல்லும் வாகனங்கள் அதி நவீன டிஜிட்டல் கேமராக்கள் மூலம் நீங்கள் எவ்வளவு விரைவாகச் சென்றாலும் உங்களது வாகனம் நீங்கள் பயணித்த சாலை தேதி-நேரம் ஆகியவைகளுடன் புகைப்படம் எடுக்கப்பட்டு உடனடியாக தேசிய தகவல் பாதுகாப்பு மைய கணனியில் தகவல்கள் உள்ளீடு செய்யப்பட்டு அந்த வாகன உரிமையாளரின் பெயரில் அபராத தொகை கணக்கீடு செய்து உடனே அவரது கணக்கில் அமுலுக்கு வந்துவிடும். அந்த அபராத தொகையை பதிவு செய்த ஒரு மாதத்திற்குள் கட்டத்தவறினால் அடுத்த மாதம் அபராத தண்டத்தொகையில் எது அதிகமோ அவை உங்களது கணக்கில் பதிவாகி விடும். அந்த தண்டத்தொகையை நீங்கள் கட்டியே தீர வேண்டும்.

நகரின் பிரதான சாலைகளில் வாகனங்களில் பறக்கும் நீங்கள் உங்கள் கண் முன்னே போக்குவரத்து காவலர் இல்லையே என்ற இறுமாப்பில் நீங்கள் வாகனங்களில் பறந்தால் அபராதம் நிச்சயம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

நகர் முழுவதும் SAHER என்று சொல்லக்கூடிய automated traffic control and management system uses the technology of digital cameras network linked with the National Information Center of Ministry of Interior தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அது போல் சிக்னல்களை (சிகப்பு விளக்கை) கடந்து செல்லும் வாகனங்களும் மேலே குறிப்பிட்டுள்ளது போல் வாகனத்தின் முன் பின் பக்கங்கள் மற்றும் ஓட்டுனரின் முகப்படத்துடன் புகைப்படம் எடுக்கப்பட்டு அபராதம் பதிவாகி விடும்.

### இதில் முக்கியமாக தெரிய வேண்டிய விபரம்:

நகர் முழுவதும் செயற்கைகோள் உதவியுடன் அதி நவீன தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது போக்குவரத்து விதி முறைகளை மீறுபவர் யாரும் தப்ப முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாகன பதிவு எண் பிளேட்டுகளில் 'சிப்' பயன்படுத்தப்பட்டுள்ளது அவை எந்த நிலையிலும் காட்டிக் கொடுத்துவிடும் என்பதை கவனத்தில் கொள்ளவும். தாங்கள் பணியாற்றும் கம்பெனியில் மக்கா செல்வதாக வாகனத்தை எடுத்து நீங்கள் ஜித்தா சென்று சுற்றித்திரிந்தால் மாட்டிக் கொள்வீர்கள் என்பதை நினைவில் கொள்ளவும். வாகனங்கள் திருடு போய்விட்டால் அல்லது கடத்தப்படட்டால் GPS தொழில்நுட்பமுறையில் கண்டுபிடிப்பதற்காக இந்த நுட்பம் கையாளப்பட்டுள்ளது.

வாகன ஓட்டுனர் உரிமம் வைத்துள்ள அனைவரும் உங்களது தொடர்பு தகவல்களை உடனே பதிவு செய்து கொள்ளுங்கள் அதன் மூலம் உங்களுக்குத் தெரியாமல் நடந்து விடும் அபராதம் மற்றும் தண்டத் தொகையிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம். தகவல்களை பதிவு செய்துள்ளவர்கள் தங்களது விபரங்களை அறிய 01 2928888 என்ற எண்ணுக்கு அழைத்து தெரிந்து கொள்ளவும் அல்லது SMS மூலம் உங்களது இகாமா எண்ணை (உ.ம்) *56*1234567890 begin of the skype highlighting 1234567890 end of the skype highlighting* to STC 88993 or Mobily 625555 என்ற எண்ணுக்கு SMS செய்து தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் தகவல்களை பதிவு செய்யவில்லையா? SMS மூலம் பதிவு செய்து கொள்ளுங்கள் ஒரு SMS க்கு 2.5 சவுதி ரியால் கட்டணம்.

உங்கள் இக்காம எண் * வாகன ஓட்டுனர் உரிமம் காலாவதி நாள் * வாகன பதிவு (இஸ்திமாரா) காலாவதி நாள் * ஸ்பேஸ் இல்லாமல் காலாவதி தேதிகளை ஹிஜ்ரி வருட கணக்கில் குறிப்பிடவும் STC 888993 or Mobily 623333 என்ற எண்ணுக்கு SMS செய்து பதிவு செய்து கொள்ளவும் SMS அனுப்பிய 24 மணி நேரத்திற்குள் உங்களுக்கு பதிவு செய்த தகவல் கிடைக்கப் பெறுவீர்கள்.

வாடகை வாகனத்தை எடுத்துச் செல்கிறீர்களா? அதற்கும் இதே விதி பொருந்தும் விதிமுறைகளை மீறி உங்கள் வாகனம் சென்ற அடுத்த வினாடியே வாடகை வாகன நிறுவனத்திற்கு SMS மற்றும் மின் அஞ்சல் மூலம் அபராத தகவல் சென்று விடும் அதற்கு நீங்களே பொறுப்புதாரி என்பதை மறக்க வேண்டாம்.

### கம்பெனி மற்றும் வீடுகளில் வாகனம் ஓட்டுபவர்களே உங்களின் மேலான கவனத்திற்கு!

ஒரு வீட்டில் / கம்பெனியில் பல வாகனங்கள் இருக்கக்கூடும் பல ஓட்டுனர்கள் சில நேரங்களில் வாகனங்களை மாற்றி எடுத்து பயன்படுத்துவார்கள் அபராத தொகை வாகனத்தின் உரிமையாளர் பெயரில் வந்து விடும் அந்த தகவல்கள் உங்கள் கவனத்திற்கு வர காலதாமதம் ஆகலாம் அதனால் தண்டத் தொகை செலுத்த நேரிடும் தவறு செய்தது யார் என்று உங்களுக்கு மத்தியில் பிரச்சனைகள் வர வாய்ப்புகள் உள்ளன ஆகவே பல பேர் பயன்படுத்தும் வாகனம் என்றால் ஒவ்வொரு மாதமும் அட்டவனை போட்டு நீங்கள் வாகனத்தை எடுக்கும் தேதி மற்றும் நேரத்தை குறித்துக் கொள்ளுங்கள் உங்களுக்கு சரியாக மொழி தெரியாத காரணத்தால் தெளிவாக பேசி விளக்கத் தெரியாமலிருக்கலாம் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

நகரின் முக்கிய சாலைகளில் வேகத்தின் விகிதம் வரையறுக்கப்பட்டுள்ளது அவைகள் முறையே 60, 70, 80 மற்றும் 120 kmph என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. தலைநகர் ரியாத்தில் நான்கு வழி விரைவுச் சாலையான King Fahad Express high way யிலும் ஒரே சாலையில் ஒவ்வொரு வழிக்கும் 120, 80, 60 என விதி உள்ளது என்பது எத்தனை பேருக்குத் தெரியும் என்று தெரியவில்லை.

சாலையில் வாகனத்தை செலுத்தும் முன் அந்தச் சாலையின் விதிமுறைகளை பின்பற்றிச் செல்வது உங்களுக்கும் உங்களை நேசிக்கும் உங்கள் சொந்தங்களுக்கும் உங்களைச் சார்ந்த சமுதாயத்திற்கும் நலம் பயக்கும்.

வல்ல ரஹ்மான் உங்கள் பயணத்தை இனிமையானதாக்கிட துவாச் செய்கிறேன்.

*நன்றி: நீதியின் குரல் BlogSpot.Com*

# சங்கதிகளும் இங்கிதங்களும் (பாகம்-3)

- உம்மு ரிஃப்அத்

**இது ஓர் உண்மைச்சம்பவம்.**

லண்டன் மாநகரிலே, 2002-இன் நடுப்பகுதியிலே நடந்த ஒரு தற்கொலை முயற்சி.

ஒரு முஸ்லிம் சகோதரர் தற்கொலை செய்யத் தீர்மானித்துவிட்டார். ஆனால் எந்த முறையில் சாவது என்று மட்டும் முடிவு செய்யவில்லை!

தற்கொலை செய்ய இருப்பதற்காக அவர் சொல்லும் காரணம் மட்டும் விசித்திரமானது.

ஒரு முஸ்லிம் செய்ய வேண்டிய அன்றாடக் கடமைகள் பெரும் பாரமாய் இருக்கின்றனவாம்!

இதுவரை பல இமாம்களின் ஆலோசனை பெற்றிருக்கிறாராம். ஆனால், அவருடைய பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லையாம்.

பெயரளவில் மட்டும் ஒரு முஸ்லிமாக வாழப்பிடிக்கவில்லை என்பதால், சாவதற்கு மிகச்சிறந்த ஒரு முறையைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறார்!

ஆனால், திடீரென்று ஒருநாள், அவருடைய 'மூளையின் மூலையில் தோன்றிய ஒருவகை உந்துதலினால், லண்டனிலுள்ள ஒரு முஸ்லிம் உதவி மையத்திற்கு மின்அஞ்சல் அனுப்பியிருக்கிறார்.

அவர்கள் என்ன அறிவுரை சொல்லியிருப்பார்கள் என்பதைச் சற்று பார்ப்போம்.

**அன்புள்ள முஸ்லிம் சகோதரரே,**

நீங்கள் எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நன்றிகள் பல. மேலும், எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டும் நாம் எடுத்திருக்கும் இம்முயற்சி தங்களையும் திருப்திப்படுத்தும் என நம்புகிறோம்.

இஸ்லாம் ஒரு பாரமாக இருப்பதாக குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால், எதனால் இப்படி எழுதினீர்கள் என்று தெரியவில்லை. இருப்பினும், எந்தப்பாகுபாடும் இல்லாமல், எல்லோரது சக்திக்கும் உட்பட்டதாகவும் மிக்க இலேசானதாகவும்தான் எல்லாம் வல்ல அல்லாஹ் தனது வேதத்தை அருளியிருக்கிறான் என்பது மட்டும் மறுக்கமுடியாத ஓர் உண்மை.

மார்க்கத்தின் வழியை விபரீதமாக விளங்கி வைத்திருப்போருக்கும், அல்லாஹுவின் இலகுவான கட்டளைகளைக்கூட பின்பற்றுவதைச் சிரமமாக எடுத்துக்கொள்வோருக்கும், இஸ்லாமிய கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியாது என நினைப்போருக்கும், இஸ்லாம் ஒரு மிகப்பெரிய பாரமாகத்தான் தெரியும்! தாங்க முடியாத பழுவாகத்தான் இருக்கும்! ஆனால், அது தவறு!

'நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணை வைக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான்; இதனைத்தவிர மற்ற எதனையும், தான் நாடியோருக்கு மன்னிப்பான்; எவர் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறாரோ அவர் மகத்தான பாவத்தை பொய்யாகக் கற்பனை செய்துகொண்டார்' (அல்-குர்ஆன் 4:48).

நரகில் நிரந்தரமாக தங்கிவிடுபவர்கள், அல்லாஹ்வுக்கு இணை வைத்தவர்கள்தான்! எனவே, நீங்கள் ஒரு முஸ்லிமாக இருக்கும்வரை வெற்றி உங்கள் பக்கம்தான் என்பதை மறக்கவேண்டாம்.

அன்புள்ள சகோதரரே, இப்போது நீங்கள் சற்று ஆறுதல் அடைந்திருப்பீர்கள் என நம்புகிறோம். நாம் எல்லோரும், எலும்பும் சதையும் கொண்ட அற்ப மனிதர்கள். எல்லோரும் தவறு செய்யக்கூடியவர்கள். ஆனால் மிகப்பெரிய ஆறுதல் என்ன தெரியுமா? அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பற்றிப்பிடிக்க திடநம்பிக்கை கொண்டு, நமது தவறுகளை உணர்ந்து, திருந்தி, பாவமன்னிப்புக்கேட்டால் (தவ்பாச்செய்தால்), அல்லாஹ் நமது பாவங்கள் எல்லாவற்றையும் அழித்து, மன்னித்து விடுகிறான். எனவே, ஒரு முஸ்லிமிற்கு என்றென்றும் வெற்றி நிச்சயம்!

அன்புள்ள சகோதரரே, மகிழ்ச்சி இருக்கும் இடத்தில், துக்கமும் கவலையும் இருக்கும்! கொண்டாட்டமும் குதூகலமும் இருக்கும் இடத்தில், குழப்பமும் வருத்தமும் இருக்கும்! ஒவ்வொரு அனுபவமும் ஒவ்வொரு படிப்பினை ஊட்டுகின்றன! இன்னல்கள், இடர்கள் இல்லாத வாழ்க்கை எவருக்கும் கிடைப்பதில்லை! எல்லாம் வல்ல அல்லாஹ் என்னென்ன வகையான படிப்பினைகளை ஊட்டுகிறான் என்பதை அறிய முயலுங்கள்.

எல்லா இடரின் பின்னும் ஒரு நன்மை இருக்கிறது என்ற உண்மையை உணர்த்தும் விதமாக பின்வரும் ஹதீது அமைந்திருப்பதைப் பாருங்கள்.

'எந்தக்களைப்பும், எந்த நோயும், எந்தத்துயரும், எந்த வருத்தமும், எந்த வேதனையும் எந்த இடையூறும் ஒரு முஸ்லிம்மீது வெறுமனே விழுவதில்லை; ஒரு சிறு முள் தைத்தாலும், அதனைக்கொண்டு, அம்மனிதனது பாவங்களில் சிலவற்றையேனும் எல்லாம் வல்ல அல்லாஹ் மன்னித்து விடுகிறான்' என்று ரசூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'சோறு ஒரு கவளமாவது கிடைக்காதா' என்று ஏங்கும் கோடிக்கணக்கான மக்கள் வாழும் இவ்வுலகில், நீங்கள் பெற்றிருக்கும் பாக்கியங்கள் சிலவற்றையாவது சிந்தித்துப்பாருங்கள்! அவற்றைத் தந்தவனையும் நினைவுகூருங்கள்.

அல்லாஹ் மனிதனைப் பார்த்துக் கூறுகிறான், எல்லாச்சிரமங்களுக்கும் முடிவில் வெற்றியிருக்குமென்று. எனவே, இவ்வுலகில் நல்லது கெட்டது எதுவும் நிரந்தரமாக இருப்பதில்லை. இருளின் முடிவில் ஒளியிருக்கும். இரவின் முடிவில் விடிவிருக்கும். மேடுபள்ளம் நிறைந்ததுதான் வாழ்க்கை என்பது! ஆனால், ஒவ்வொரு துன்பமும் நம்மீதான சோதனையின் ஒரு பகுதி என்று ஒவ்வொரு முஸ்லிமும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவற்றைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும்.

தற்கொலை என்பது இஸ்லாத்திலே மிக வன்மையாகக் கண்டிக்கப்படும் ஒரு விஷயமாகும்.

எனவே, தற்கொலை உங்கள் விருப்பத்திற்க்குரிய விஷயமல்ல மாறாக நினைத்துப்பார்க்கவே முடியாத ஒன்றாகும்.

தற்கொலை செய்பவன் அல்லாஹ்வின் கடும் கோபத்திற்காளாகிறான் என்பது இஸ்லாமிய கோட்பாடாகும். அதன் விளைவு, மரணத்தின் பின் வரும் நித்திய தண்டனை ஆகும். அத்தண்டனை, எந்தவிதத்தில் தன்னைத்தானே கொன்றுவிட்டானோ, அதே விதத்தில் மீண்டும் மீண்டும் கொல்லப்படுவதன் மூலம் தொடர்ந்து வேதனை அளிக்கப்படுவதாகும்.

இவ்விஷயம் பற்றிக் கூறுகையில் ஓர் அறிஞர் பின்வரும் ஹதீதை எடுத்துக்காட்டினார்.

...ஒரு ஆயுதத்தைக்கொண்டு தன்னைத்தானே கொன்றுவிட்ட ஒருவன், அவ்வாயுதத்தின் மூலம் மீண்டும் மீண்டும் கொல்லப்படுவான்.' (புஹாரி)

மேலும். ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள், 'ஒரு மனிதன் தன்னைத்தானே கொன்றுவிட்டான். அப்போது அல்லாஹ் கூறினான், 'என் அடிமை, அவசரப்பட்டு தன்னைத்தானே அழித்துகொண்டான்; அவனுக்கு சுவனம் கிடைக்கும் வாய்ப்பை நான் அழித்துவிட்டேன்' என்று'.

இது ஒரு பேரிழப்பாகும். வாழ்க்கையை முடித்துக்கொள்ளும்படியான கஷ்டங்கள் எவருக்கும் ஏற்படுவதில்லை. தாமே பொறுமையை இழந்து அப்படி மடிந்துவிடுகிறார்கள். அதன் தண்டனையை அறிந்த எவரும் அப்படி ஒரு முடிவை கனவிலும் கூட நினைக்கத் தயங்குவார்கள்.

மனிதன் தற்கொலையை நாடுவதற்கான பிரதான காரணம், கடுமையான மனச்சஞ்சலமாகும். அப்படியான நிலையில் செய்யவேண்டியது என்ன?

அல்லாஹ்வின் அருளிலிருந்து நீங்கள் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள்! நிச்சயமாக (அல்லாஹ்வின்மீது நம்பிக்கையற்ற) நிராகரிப்போரைத்தவிர, மற்றெவரும் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிடமாட்டர்கள். ( அல்-குர்ஆன் 12:87)

எல்லாவற்றிற்கும் ஒருநாள் விடிவு வரும் என்ற எதிர்பார்ப்பில் ஒருபோதும் நம்பிக்கை இழக்கக்கூடாது. எப்படிப்பட்ட மனச்சஞ்சலங்களோ, பேரிழப்புகளோ, வாழ்வில் தடுமாற்றங்களோ, ஒரு குடும்ப அங்கத்தவரை இழந்ததினாலோ, வேலை பறிபோனதினாலோ, ஆற்றொணாக் கடும் சினமோ எதுவாயிருந்தாலும், எதற்கும் ஒரு முடிவிருக்கும். மறுக்க முடியாத நம்பிக்கை, எதிர்பார்ப்பு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நிமிர்த்தமே ஆகும்.

எதிர்பார்ப்புத்தான் சரியான மருத்துவம். 'பொறுமையாய் இரு' என்று சொன்னால், 'எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணையை எதிர்பார்த்துக் காத்திரு' என்று பொருளாகும். எந்த மனிதனும் சிலவேளைகளில் கவலைப்படுவது, தடுமாறிப்போவது எல்லாம் ஒன்றும் புதுமையான விஷயங்களல்ல. ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அறியாத, அடையாத கவலைகளா? ஆனால், அவர்கள் கவலைப்பட்டதெல்லாம் தமக்கு அளிக்கப்பட்ட கொடுமைகளினாலல்ல. மாறாக, இறைமறுப்பாளர்கள் இறுதியில் அடையப்போகும் நரக வேதனையைக்குறித்து கவலைப்பட்டார்கள். சிந்திக்கத்தவறிய அந்த மனிதர்களின் அறியாமயைக்குறித்து வேதனை அடைந்தார்கள்.

'(நபியே) நிச்சயமாக நீர் விரும்பியோரை நேர் வழியில் செலுத்திவிடமாட்டீர்; எனினும் அல்லாஹ் நாடியோரையே நேர்வழியில் செலுத்துகிறான்; மேலும், நேர்வழி பெறுகின்றவர்களை அவனே மிக அறிந்தவன்' (அல்-குர்ஆன் 28: 56)

மனிதன் சோர்ந்துபோகும்போது அவன் வாழ்வில் இருள் சூழ்ந்துகொள்ளும். ஆனால், நம்பிக்கையை வளர்த்துக்கொண்டால், எல்லாச் சோர்வுகளும் பறந்து போய், புத்துணர்ச்சி பொங்கும். எனவே, இடர்களைக்கடந்து, தொலைவில் தெரியும் விடிவுக்காக காத்திருக்கக்கூடிய மனப்பக்குவத்தை கேட்டுப் பிரார்த்திக்க வேண்டும். நாளை என்ற எதிர்பார்ப்பு இல்லையென்றால், ஒருவகையில் கவலைப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஆனால், விடியப்போகும் நாளின் நன்மைகளையும், குடும்பத்தினரின் அரவணைப்பையும், நண்பர்களின் நெருக்கத்தையும், உறவினர்களின் அன்பையும் மற்றும் உலகில் பரந்து கிடக்கும் அல்லாஹ்வின் அருட்கொடைகளையும் எதிர்பார்த்து வாழும் மனிதனுக்கு கவலை இருக்காது. நிம்மதியான உறக்கமும், அமைதியும் கிடைக்கும்.

நமது பிழைகளை மன்னித்து, நம்மீது கருணை காட்டவேண்டும் என்று எல்லாம் வல்ல அல்லாஹ்விடத்தில் பிரார்த்திக்க வேண்டும். பிறரிடத்திலும், மற்றும் எல்லா படைப்பினங்களிலும் அன்பு செலுத்துபவனுக்கு, சாந்தியும் சமாதானமும் கிடைக்கும்.

தீங்குகள், பேரிழப்புகள், துன்பங்கள், விபத்துக்கள் எல்லாம் வல்ல அல்லாஹுவிடத்தில் இருந்து வரும் சோதனைகள் என்றும், பொறுமைகாத்து வாழ்பவனுக்குத்தான் வெற்றியும் சுவன வாழ்வும் கிடைக்குமென்றும், நம்பிக்கையோடு வாழ்பவர்கள்தான் முஸ்லிம்கள்.

(விசுவாசம் கொண்டோரே!) பயம் மற்றும் பசியிலிருந்து ஏதாவது ஒன்றைக்கொண்டும், செல்வங்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றில் குறைவைக்கொண்டும் நிச்சயமாக நாம் உங்களை சோதிப்போம்; மேலும் நபியே! இவற்றைப் பொறுத்துக்கொள்வோருக்கு நீர் நன்மாராயம் கூறுவீராக! அவர்கள் எத்தகையோர் என்றால், தங்களுக்கு ஏதேனும் துன்பம் பிடித்தால், 'நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கிறோம்; நிச்சயமாக நாம் அவன் பக்கமே திரும்பிச்செல்பவர்களாக இருக்கிறோம்' என்று கூறுவார்கள். அத்தகையோர்-அவர்கள் மீதுதான் அவர்களுடைய இரட்சகனிடமிருந்து நல்லாசிகளும், கிருபையும் ஏற்படுகின்றன. மேலும், அவர்கள்தாம் நேர்வழியையும் பெற்றவர்கள்.

( அல்-குர்ஆன் 2: 155-157)

இந்த லண்டன் மனிதர் ஆலிம்களின் கைக்குள் வந்துவிட்டதால் தப்பித்துக்கொண்டார். அவர் மனமாற்றத்திற்காக வழங்கப்பட்ட இந்த அறிவுரை அவர் கண்களைத் திறந்துவிட்டது.

ஆனால், அப்படி இல்லாமல், ஒரேயடியாக தற்கொலை செய்துகொண்ட மற்றுமொரு மனிதரையும் பார்ப்போம்.

அவர் வயதான ஒரு மனிதர். செல்வத்தின் செழிப்பு அவர் முகத்தில் தெரிகிறது. நேரம் தவறாமல் மஸ்ஜிதுக்கு வருகிறார். எல்லோருடனும் இன்முகத்துடன் உரையாடுகிறார். உதவி தேவையானோருக்கு வலிந்து சென்று உதவுகிறார்.

பஜ்ர் தொழுகைக்குப்பின் ஒரு நாள், சாவகாசமாக அமர்ந்து இவருடன் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இவரது மூத்த மகன் அமெரிக்காவில் ஏதோ ஒரு பெரிய வேலையில் இருக்கிறானாம். இரண்டாவது மகன் ஒரு பிரபலமான டாக்டராம். மகள், டாக்டர் மருமகன், இரண்டு பேரப்பிளைகள் ஆகியோருடன் வாழ்கிறார், இவர்.

இப்படி எல்லாம் பேசிக்கொண்டு போனவர், பல்லாண்டுகளுக்கு முன் நடந்துபோன, அந்த மறக்கமுடியாத நிகழ்வையும் கூறிப் பெருமூச்சுவிட்டார்!

அப்போது, குழந்தைகளெல்லாம் சிறுவர்கள். வறுமையில் தள்ளாடிய குடும்பம். விவசாயம்தான் ஒரேயொரு வாழ்வாதாரம்.

பலத்த கடன் சுமையுடன் பயிற்செய்கையை தொடங்கி இருந்தார்.

ஆனால், எதிர்பாராமல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பயிர்கள் அத்தனையும் அழிந்துவிட்டன. பசி, பசி எனப்பதறும் சிறு குழந்தைகளின் முகங்களை பார்க்கமுடியாமல் தவித்தார். இனிமேலும் தாங்க முடியாது போகவே, இரவு தூங்கப்போகும்போது எலிமருந்தை அருந்திவிட்டார்.

மறுநாள் விடிந்தது! இவர் சாகவில்லை! பதிலுக்கு, நற்செய்திக்கு மேல் நற்செய்தி வந்ததுகொண்டே இருந்தது! வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியான, அரசு நிவாரணமாம்! தொடர்ந்து பல லட்சங்கள் நஷ்ட ஈடாம்! இப்படி அதிஷ்டங்களின் பட்டியல் நீண்டுகொண்டே போயின.

'அன்று நான் இறந்துபோயிருந்தால், அன்பான மனைவி, மக்கள், பேரக்குழந்தைகள், வளமான வாழ்க்கை எல்லாவற்றையும் இழந்த பாவியாயிருந்திருப்பேன். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணைக்கு ஈடேது?' என்று உணர்ச்சிபூர்வமாகக் கூறினார்.

இவரது குடும்ப நிலை, இவருக்கு ஏற்பட்ட பேரிழப்பு, முகத்தில் தெரிந்த பதட்டம் என்பவற்றை கணித்து, சமயோசிதத்துடன் செயல்பட்ட கடைக்காரர், எலிமருந்திற்குப்பதிலாக இருமல் மருந்தைக் கொடுத்திருந்ததினால் அவர் காப்பாற்றப்பட்டிருக்கிறார்!

எனவே, 'தாங்கமுடியாது' என தோன்றும் துயரம், மாறி 'கவலைப்பட்டது வீண்' என்பதுபோல் ஆகிவிடலாம். பின்னர், அப்படி ஒரு துயரம் ஏற்பட்டதே மறந்துபோயும்விடலாம். இது மட்டுமல்ல, உலகவாழ்க்கைகூட ஒரு கனவு போல் மறைந்துவிடக் கூடியதுதான். முடிவில்லாத சுவன வாழ்க்கைதான் நிரந்தரமானது.

தற்கொலை ஒரு பெரும்பாவம் என்று இருப்பதற்கு முக்கிய காரணம், அவனது உடலும் உயிரும் அவனுக்குச்சொந்தமல்ல என்பதுதான்! படைத்தவனுக்குத்தானே பொருள் சொந்தம்! எனவே, படைத்தவனும், அழிப்பவனும், மீண்டும் எழுப்புபவனும், சுவனத்தைத்தந்து மகிழவைப்பவனும் எல்லாம் வல்ல அல்லாஹுவேதான்.

எனவே, ஒரு முஸ்லிம், அற்பமான துயரங்களினால் கலங்கிவிடமாட்டான். 'எதுவும் வந்ததுபோல் மறைந்துவிடும்' என்று பொறுமை காப்பான். துயரங்கள் அத்தனையும் நன்மையாக ஆக்கித்தரவேண்டும் என்று துஆ செய்வான். கவலைகளை மகிழ்ச்சியாக்க முயன்று, வெற்றியும் காண்பான்.

எனக்கும் உங்களுக்கும், இம்மையிலும் மறுமையிலும் நல்லவற்றையே அருளவேண்டும் என்று எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திபோம்.

---

### *கருப்பை சுதந்திரம்.. முதல் பக்க தொடர்ச்சி...*

ஆனால், நம் உடம்பிலுள்ள அவயங்களை அப்படி உரிமை கொண்டாட முடியது. ஏனென்றால் நம் இஷ்டத்திற்கு அவைகளை தவறாக உபயோகிக்கவோ முடியாது. இயற்க்கைக்கு மாறாக அவற்றை தவறாக பயன்படுத்த எந்த உரிமையும் நமக்கு இல்லை. படைத்தவனின் அனுமதி பெறாமல், அவனுடைய படைப்பை (தவறாக) உபயோகிக்க நமக்கு என்ன தகுதி இருக்கிறது?

நிச்சயமாக மறுமையில் செவிப்புலனும், பார்வையும், இருதயமும் ஒவ்வொரு (அவயமும்) அதனதன் செயல் பற்றி கேள்வி கேட்கப்படும்' (திரு குர்ஆன் 17:36).

நீதித்துறையில் இன்று நடைமுறையில் நாம் கண்கூடாக காண்கின்றோம். தற்கொலைக்கு முயலுபவர்களை கைது செய்து தண்டனையும் வழங்கப்படுகிறது. ஏன்? அவருடைய உயிர்தானே, அவர் என்ன வேண்டுமனாலும் செய்துகொள்ளட்டுமே என்று சட்டம் இருந்துவிடலாம் இல்லையா? முடியாது. நம்மால் இயற்றப்பட்ட சட்டத்திற்கே இவ்வளவு சக்தியிருந்தால் நம்மையே படைத்தவனுக்கு எவ்வளவு சக்தியிருக்கும்?

### அடையாளச்சின்னம்:

ஆணுக்கும் பெண்ணுக்கும் படைப்பிலுள்ள வித்தியாசங்களில் மிக முக்கியமானது கர்ப்பபையாகும். அது பெண்மைக்கும் தாய்மைக்கும் அடையாளச்சின்னம். அல்லாஹ் அந்த அவையத்தின் முக்கிய வேலையாக அல்லாஹ் அனுமதித்த வழியில் இனவிருத்திக்கு (கருவுக்கு) அடைக்கலமாக இருப்பது, கருவை தாங்கி, வளர்த்து, பாதுகாத்து அழகிய சிசுவாக ஈன்றேடுப்பது. ஆகவே, அதற்கு மாறாக தகுந்த காரணமில்லாமல் கருப்பை சுதந்திரம் என்று கூறி

### கருவை வெளியேற்றுவது, கருவை கலைப்பது

கருவளரவிடாமல் செய்வது தனது சுயஉரிமை என்று மேல்நாடுகளில் ஊளையிடுகின்றனரே. கருவை கலைப்பது பெரிய குற்றமாகும். ஓரணு விந்தையும் பெண்முட்டையையும் ஒன்றிணைத்து பல அணு கூட்டாக அதை மாற்றி, எலும்பை படைத்தது, அதன் மேல் சதையை போர்த்தி, வெவ்வேறு அவயங்களை அளவோடு படைத்து, அதற்கு உயிரூட்டி அவனியில் பிறக்கச்செய்கிறானே அவனுக்குதானே அந்த உடலும் உயிரும் சொந்தம்.

### சத்திரமா அல்லது சாவடியா?

அடுத்தது மிக முக்கியமான பிரச்சனை! தனது கணவனையன்றி, வேறு எவருக்கும் அதை உபயோகப்படுத்த அனுமதிப்பதில்லை என்பதில் மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டும். அரபு மொழியில் ஒரு அழகிய பழமொழி உண்டு. 'எப்பொழுதெல்லாம் அறிவியல் மலையின் உச்சிக்கு போகிறதோ அதற்கு முன்பே அங்கு மதம் அமர்ந்திருக்கும்.

கருப்பையை தனது சொந்த உரிமையாக கருதும் பெண்டிர், தனது கர்ப்பபையை பிறருடைய கருவை சுமக்கும் ஒரு கோணிப்பையாக உபயோகப்படுத்தும் அநாகரிகம் பரவி வருகிறது. இது ஒரு சுயநலச் செயல். தான்தோன்றித்தனம்!

இதில் பல முறைகள் நடைமுறையில் உள்ளன. எந்த சம்பந்தமும் இல்லாத ஆணின் விந்தணுவும் பெண்ணின் முட்டையும் ஒரு சோதனைக்குழாயில் சேர்த்து செயற்கை முறையில் கருத்தரிக்கப்பட்டு, அந்தக்கருவை கருப்பையினுள் செலுத்தி அதை வளரவிடுவது. சம்பந்தமே இல்லாத ஆணின் விந்தணுவை எடுத்து ஒரு பெண்ணின் கருப்பையினுள் செலுத்தி கருத்தரிக்க செய்வது தொடர்பேயில்லாத பெண்ணின் முட்டையை தன் கணவரின் விந்தணுவுடன் சேர்த்து கருத்தரித்து அதை தன் கற்பபையில் சுமப்பது இஸ்லாம் இது விஷயத்தில் மிக தெளிவாகவும் கண்டிப்பாகவும் இருக்கிறது.

கணவன் மனைவியை தவிர வேறு யாருடைய உயிரணுக்களையும் சேர்த்து கருத்தரிக்க செய்ய இஸ்லாத்தில் இடமில்லை மேலும், இப்படிப்பட்ட அந்நியருடைய அந்தக்கருவை எந்த இஸ்லாமியப் பெண்ணும் தன்னுடைய கருவறையில் தங்கவைத்து வளர்க்க முடியாது. கர்ப்பை, என்ன வழிபோக்கர்கள் தங்கும் சத்திரமா அல்லது சாவடியா?

### இந்தக்குழந்தைகளுக்கு தாய் யார்? தந்தை யார்?

இப்படிப்பட்ட வாடகைத்தாய் முறையை இஸ்லாம் வெட்ககேடான செயலாகவும், மனிதாபிமானமற்றதாகவும் வெறுக்கிறது. சட்ட பூர்வமாக மணமுடித்த பெண்ணின் கணவனின் உயிரனணுவை மட்டும்தான் சில மார்க்க கட்டுப்பாடுகளுடன் சேர்க்க அனுமதியுள்ளது. அப்படியிருந்தாலும் அந்தக்கருவை மனைவியின் கருவரைக்குள்தான் வளர்க்க முடியும்.

தாய்மையை விற்பனை பொருளாகவோ வாடகைப் பொருளாகவோ ஆக்க முடியுமா? தாய்மை எனபது இறைவன் தந்த வரப்பிரசாதம். கர்ப்பப்பை அவன் படைத்த உறுப்பு. அதை கையில் பொம்மை போல எடுத்துக்கொண்டு விளையாடுவதா?

### காயப்படும் கர்ப்பப்பை:

தன்னைத்தானே காயப்படுத்துவதற்கு எந்த நாட்டிலும் சட்டப்படி அனுமதியில்லை. ஒரு பெண் எப்பொழுது தனது கர்ப்பபையை தானே காயப்படுத்துகிறாள்? இரண்டே தருணங்களில! ஒன்று சுய இன்பம் அனுபவிக்க மற்றொன்று தனது கற்பக்கருவை கலைக்க. இஸ்லாமும் மருத்துவ உலகும் நிராகரிக்கும் இந்த சுய இன்பத்தை தனது உரிமை என்ற போர்வைக்குள் பதுங்கி செய்யலாமா? சுய இன்பம் அனுபவிக்க மேல்நாடுகளில் பல சாதனங்கள் சந்தையில் கிடைக்கின்றன. இவைகளையோ அல்லது மற்ற எந்த பொருளையோ சற்று ஆழமாக உபயோகிக்கும்பொழுது கர்ப்பப்பை காயப்ப்படுவதுண்டு.

அடுத்து உண்டாகிய கருவை கலைக்க கர்ப்பபையை காயப்படுத்துகிறார்கள். உலகத்தில் எந்த மதமும் விபச்சாரத்தை அனுமதிக்கவில்லை. நாகரீகம் வளர்ச்சியடையாத காலங்களில் கோயில்களின் பெயரில், ஆலயங்களின் பெயரில் புனிதம் என்ற போர்வையில் விபச்சாரம் நடந்தாலும் பிற்காலத்தில் அவையாவும் தடைசெய்யப்பட்டன. ஆனால் இஸ்லாம் இது போன்ற விபச்சாரத்தை ஒருபோதும் அனுமதித்ததில்லை.

### மலட்டுத்தன்மை:

கர்ப்பப்பை சுதந்திரம் என்ற போர்வையில் தான் நினைத்ததை செய்யக்கூடாது. இயற்கைக்கு மாறாக இன்றைய இளம்பெண்கள் தானாகவே சில முடிவுகளை எடுப்பதால் பல விபரீதமான விளைவுகளை சந்திக்கவேண்டியதாகி விடுகிறது. பொருளாதார்ச் சூழ்நிலை முதற்கொண்டு பல காரணங்களினால் திருமணத்தை மிகவும் தாமதப்படுத்துவது அதில் ஒன்றாகும்.

மேலும் திருமணம் முடிந்த பிறகும் சுதந்திரமாக இருக்கவேண்டும், விரும்பிய இடங்களுக்கு நினைத்த பொழுது சென்று சுற்றித்திரிய வேண்டும் என்று ஆசைப்பட்டு முதல் குழந்தை பிறப்பதையே வெகு காலம் தள்ளிப்போடுவது, தாய்மை அடைந்து கருவை சுமக்கும் சுமை, பிரசவ வேதனை, பிரசவ நேரத்தில் அகால மரணம் ஆகியவற்றை எண்ணி பயந்து, குழந்தை பிறப்பதை நிறுத்திக்கொள்வது போன்ற இயற்க்கைக்கு மாறான செயல்களால் கர்ப்பப்பை பாதிக்கப்படுகிறது.

பருவத்தே பயிர் செய் எனபது முது மொழி. அந்தந்த காலங்களில் கருத்தரிப்பது இன்றியமையாதது. அதை தவிர்ப்பதாலும், தாமதப்படுத்துவதினாலும் ஹார்மோன் கோளாறுகள் ஏற்பட்டு இனவிருத்தி பாதிக்கப்ப்படும் அபாயம் ஏற்படுகிறது. சிலருக்கு மலட்டுத்தன்மை எற்பட்டுவிடுகிறது. புத்திர பாக்கியம் இல்லாதவர்களை மலடன்-மலடி என்று இந்த சமுதாயம் முத்திரை குத்துகிறது. குழந்தையில்லாத இத்தம்பதிகள் எல்லையில்லாத மனவேதனையடைகிறார்கள்

### மானங்கெட்ட மங்கையர்:

கர்ப்பப்பை சுதந்திரம் என்ற போர்வையில் தான் நினைத்ததை செய்யக்ககூடாது. திருமணத்திற்கு முன்பே உடலுறவு (பிரி மேரிடல் செக்ஸ்) என்ற கீழ்த்தரமான கலாச்சாரம் மேல்நாடுகளில் இன்று கொடிகட்டி பறக்கின்றது. ஹராமான இந்த செயலால் உண்டாகும் முறையற்ற கருவைக்கலைக்க பல முயற்சிகளை மேற்கொள்ளுகிறார்கள். பரம ரகசியமாக தாமாகவே இதை செய்ய நாடி, அதிகமான இரத்தபோக்கு, புண் புரையோடி, அழுகி இரத்தம் கெட்டுப்போய் (Septic) பலர் மரணம் அடைகின்றனர். முறையாக பயிற்சி எடுக்காத போலி மருத்துவர்'

திருவிளையாடல்களினால் சிலர் இறக்கிறார்கள்.

## எது உரிமை? எது சுதந்திரம்?

ஆம்! இறைவன் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்திருக்கிறான். எதில்? தனது சுயஅறிவை பயன்படுத்துவதில்! எது சிறந்தது? எது கீழ்த்தரமானது? எது அல்லாஹ்விற்கு பொருந்தக்கூடியது? எது அல்லாஹ வெறுக்கக்கூடியது? இவைகளை சிந்தித்து நல்லதை தேர்ந்தெடுப்பதில் சுதந்திரத்தை கொடுத்துள்ளான். மேலும், பெண்களை நேர்மையாக நியாயமாக இறைவனுக்கு கட்டுப்பட்டு அவனுக்கு கீழ்படிந்து நடக்கிறார்களா அல்லது அவனுக்கு எதிராக கட்டுப்பாடின்றி காட்டுமிராண்டிகளாக வாழ்கின்றார்களா என்று சோதித்துக்கொள்ள சுதந்திரம் கொடுத்துள்ளான். .

ஆம்! இறைவன் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்திருக்கிறான். எதில்? தனது சுயஅறிவை பயன்படுத்துவதில்! எது சிறந்தது? எது கீழ்த்தரமானது? எது அல்லாஹ்விற்கு பொருந்தக்கூடியது? எது அல்லாஹ வெறுக்கக்கூடியது? இவைகளை சிந்தித்து நல்லதை தேர்ந்தெடுப்பதில் சுதந்திரத்தை கொடுத்துள்ளான்.

தன்னுடைய அவயம் தானே என்று ஒரு இளம்பெண் ஏதாவது ஒரு காரணத்தை காட்டி தனது கர்ப்பபையை உடம்பிலிருந்து அகற்றி விட முடியாது. அல்லாஹ் அளவெடுத்து அமைத்த படைப்பை அகற்றி வெளியே எறிவதா? இது நிரந்தர கர்ப்பதடையல்லவா? இதை இஸ்லாம் அனுமதிக்காது. அவள் உயிருக்கு ஆபத்து உருவாக்கும் நிலையில் அந்த கர்ப்பப்பை நோயுற்றிருந்தால் மட்டுமே அந்த ஆபுரேசன் செய்துகொள்ள முடியும்.

அடுத்து ஏதாவது ஒரு காரணத்தினால் கர்ப்பபையை நீக்கி விட்டவர்கள் சில காலம் கழித்து மீண்டும் குழந்தை வேண்டும் என்றால் என்ன செய்ய முடியும்? இன்னொரு பெண்ணுடைய கர்ப்பபையை தனக்குள் அறுவை சிகிச்சை மூலம் பொருத்தி கொள்ளவேண்டும் அல்லது வாடகைக்கு வாங்க வேண்டும்? இந்த புதிய கர்ப்பபையில் கணவன் மனைவி புனித உடலுறவு கொள்ளலாமா? இதில் கருத்தரிக்கலாமா? இஸ்லாம் உறுதியாக ஒன்றை தெளிவு படுத்துகிறது. எந்த கரணம் கொண்டும் எந்த மனித உறுப்பையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ விற்பனை செய்யவோ வாங்கவோ கூடாது.

## கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதே!

1994 ஆம் ஆண்டு கெய்ரொவில் நடந்த மக்கள் தொகையும் அதன் வளர்ச்சியும் என்ற ஐ.நா அகில உலக மாநாட்டில் இனப்பெருக்க நலம் என்ற பிரிவை மனித உரிமை சுதந்திரம் (Human rights) அமைப்பின் கீழ் சேர்த்தார்கள் மேலும் பெண்களின் ஆதிக்கத்தை இந்த உரிமைகளை காக்கும் அடிப்படை கருவியாக அங்கிகரித்தார்கள். அனால் நடப்பது என்ன? உரிமைகள் காக்கப்பட்டனவா? ஒரு மணி நேரத்தில் குறைந்தது.

585,000 பெண்கள் மகப்பேறு, பிரசவத்தில் மரிக்கிறார்கள். இதனால், அவர்களுக்கு பிறந்த ஒரு வருடத்திற்குட்பட்ட 90% பச்சிளங் குழந்தைகள் இறந்து விடுகின்றனர்.

15மில்லியன் மாதுக்கள் மகப்பேறு, பிரசவத்தில் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள்

50,000 - 100,000 மங்கையர் பாதுகாப்பற்ற கருக்கலைப்பில் இறக்கிறார்கள்

2 மில்லியன் சிறுமிகள் பாலுறுப்புகளில் வதைக்கப்படுகிறார்கள். இவர்களில் அநேகம் பேர் அதிக இரத்தப்போக்கால் இறந்துவிடுகிறார்கள் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட பெண்டிர்கள் இனப்பெருக்க உறுப்புகளில் ஏற்படும் நோயினால் உயிரை விடுகிறார்கள் 6000 மாதர்கள் எய்ட்ஸ் என்ற பாலியல் நோயினால் பாதிக்கப்படுகிறார்கள்

அமெரிக்காவில் மட்டும் ஒரு வருடத்திற்கு சராசரியாக 1.4 மில்லியன் வீதம் கடந்த 27 வருடங்களில் 38 மில்லியன் கருக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

அங்குள்ள பெண்களில் 14% முதல் 20% வரை ஒரு முறையாவது முற்றிலுமாக கற்பழிக்கப்படுகிறார்கள்

## ஏன் இந்த அவல நிலை?

மே 7, 2005, போப் பெனெடிக்ட் XVI ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்: 'ஒரு கரு உற்பத்தியானதிலிருந்து அதனுடைய புனிதத்தன்மையும் ஆரம்பிக்கிறது. மாதர்கள் தங்களுடைய கருப்பை சுதந்திரத்தை தவறுதலாக புரிந்து வைத்திருக்கிறார்கள். கருக்களை அழிப்பது உண்மையான சுதந்திரம் அல்ல. அது மனிதகுலத்தையே அடிமையாக்கும் ஒரு அவலமான கொடுமை'

இந்த அறிவிப்பு காற்றிலே பறக்கிறது! அயர்லாந்தில் கருக்கலைப்பு தடை செய்யப்பட்டுள்ளதால் வருடத்திற்கு 5000-க்கும் மேற்பட்ட பெண்கள் பிரிட்டன் சென்று அபார்ஷன் செய்து கொள்கிறார்கள்!

## இஸ்லாமே சரியான தீர்வு

இப்படிப்பட்ட கீழ்த்தரமான, கொச்சையான, மனிதகுலத்திற்கே அவலமான கர்ப்பப்பை சுதந்திரம் பெண்ணுரிமை இல்லை, அத்தகைய உரிமையை பெறுவதை விட பெண்ணாகவே பிறக்காமல் இருப்பதே மேல் என்று உணரும் சமுதாயம் இந்த வையகம் முழுதும் உருவாக வேண்டும். அதற்கு இஸ்லாமே ஒரே வழி! உன்னத வழி!

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 22)

- டாக்டர் ஷேக் சையது M.D.

விந்தணு - சினைமுட்டை ஒன்றோடு ஒன்று இணைவதால் கரு உருவாகிறது. அவ்வாறு இருவரின் உயிரணுக்களும் இணையும் நேரத்தில் எவரின் மரபணு தொகுப்பின் விகிதம் அதிகமாக இருக்கிறதோ அவரின் சாயல் குழந்தையில் படிந்திருக்கும் என்றும், விந்தணுவில் உள்ள X Y என்ற பாலினக் குரோமோசோம்களில் எது சினை முட்டையோடு சேர்கிறது என்ற அடிப்படையிலேயே குழந்தையின் பாலினம் தீர்மானம் ஆகிறது என்றும் இதற்கு முந்திய தொடர்களில் நாம் அறிந்து கொண்டோம்.

இந்த தகவலின் அடிப்படையில், கரு உருவாக ஆண்-பெண் இருவரின் பங்களிப்பும் இருக்கவேண்டும். ஆண்-பெண் ஆகியோரின் விந்தணு -சினைமுட்டை ஆகியவற்றின் இணைப்பே கரு ஆகும் என்ற உண்மையை அறிந்து கொண்டுள்ளோம். குளோனிங் முறை, சோதனைக்குழாய் முறை என எந்த முறையில் குழந்தை உருவானாலும் சரி ஆண் - பெண் ஆகிய இருவரின் பங்களிப்பும் அவசியம் இருக்க வேண்டும் என்பது அறிவியல் உண்மை. இவ்வுண்மையை அறிவியல் உலகம் 1940ம் ஆண்டில்தான் அறிந்தது. அதனை அறிந்து கொள்வதற்கு முன் பல சுவாரஸ்யமான தகவல்கள் கருயியல் குறித்த ஆய்வினை மேற்கொண்ட அறிஞர்களிடையே விவாதிக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானிகள் மற்றும் தத்துவ அறிஞர்களின் முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர்தான் அரிஸ்டாட்டில். கி.மு. 322-384 காலகட்டத்தில் (அதாவது 2388 ஆண்டுகளுக்கு முன்பு) பிறந்து வாழ்ந்தவர். இவர் கிரேக்க தத்துவஞானி என்று போற்றப்படுகிறார். இவர் வானியல், புவியியல், இயற்பியல், கருயியல் மற்றும் உடலியல் என பல துறைகளிலும் மிகச் சிறந்த அறிஞராக திகழ்ந்தவர். குறிப்பாக தர்க்கவியல் கலையில் மிகச்சிறந்த சிந்தனையாளராக விளங்கினார். பல்வேறு துறைகளில் புலமைபெற்ற அவரின் தர்க்கவியல் பற்றிய சிந்தனை, இஸ்லாமிய மத்தியக் கால கட்டத்தில் இஸ்லாமிய நூட்களில் பெருமளவு ஆதிக்கம் செலுத்தியது.

இவரது சிந்தனைகளில் பல காலாவதியாகிப் போனாலும், ஒரேயொரு சிந்தனை மட்டும் சாகா வரம் பெற்று உலவுகிறது. எந்தச் செயலையும் ஏன்? எதற்கு? எப்படி? எனக் கேட்டுப் பார்த்து விடைகாண வேண்டும் என்ற அரிய சிந்தனையை தோற்றுவித்தார். எது சொன்னாலும், எது நடந்தாலும் வெறுமெனே கேட்டு விட்டு, பார்த்து விட்டு போய் விடும் மனிதர்களின் சிந்தனைப் போக்கை மாற்றி அமைத்த மாபெரும் மேதை தான் இந்த அரிஸ்டாட்டில்.

அறிஞர் அரிஸ்டாட்டில்தான் முதன் முதலில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு கரு எப்படி உருவாகிறது என்று சிந்திக்க முனைந்தார். சரியாக அறிந்து கொள்வதற்கு போதிய ஆதாரங்கள் அவருக்குப் புலப்பட வில்லை. எனினும் கருயியல் குறித்து சிந்திப்பதற்கு துவக்கப் புள்ளி வைத்தவர் அரிஸ்டாட்டில்தான் என்பதில் சந்தேகம் இல்லை.

அவரது காலத்திற்கு பின் தோன்றிய பல அறிஞர்களும் கரு எவ்வாறு உருவாகிறது என்பது குறித்து அறிய ஆசைப்பட்டனர். ஆனாலும் கருயியல் பற்றி ஆய்வு மேற்கொள்வதற்குத் தேவையான பல உபகரணங்கள் அவர்கள் வசம் இல்லை. மிக நுட்பமானதாக காட்சிதரும் கருவின் ஆரம்ப நிலையை ஆய்வு செய்திட மிக அவசியமானதாக விளங்கும் நுண் நோக்கிகள்(Microscopes) அவர்களது காலத்தில் கண்டுபிடிக்கப்பட வில்லை. 16-ம் நூற்றாண்டின் மத்தியில் சுயமாகவே தொலைநோக்கிகள் (Telescope)கண்டுபிடித்து வானத்தை ஆய்வு செய்த புகழ் பெற்ற கலீலியோ போன்றவர்களால் கூட கருயியல் பற்றி ஏதும் கருத்துக்கூற முடியவில்லை. காரணம் அக்கால கட்டம் வரைக்கும் நுண்னோக்கிகள்(Microscope) எதுவும் கண்டு பிடிக்கப்பட வில்லை. கருயியல் பற்றி அறிந்து கொள்ள மிக அவசியத்தேவை, நுட்பமான பொருளை காணத்துணை புரியும் நுண்ணோக்கி கருவியாகும். 17ம் நூற்றாண்டின் துவக்கத்தில்தான் நுண்ணோக்கிகள் (Microscope) கண்டு பிடிக்கப்பட்டு செல் ஆய்வு நடை பெற்றுக் கொண்டிருந்தது.

17ம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்த அறிஞர்கள் இரு பிரிவினர்களாக பிரிந்து இரு வெவ்வேறான கருத்துக்களின் அடிப்படையில் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பெண் கருவுற்றிருக்கும் கால கட்டங்களில் அவளுக்கு மாதவிடாய் - உதிரப்போக்கு ஏற்படுவதில்லை. இதற்கான உண்மைக் காரணம் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியாத அறிஞர்களில் ஒரு சாரார், மாதவிடாய்தான் உறைந்து குழந்தையாக உருவாகிறது என நம்பி வந்தார்கள்.

வித்துகளில் மறைந்திருக்கும் குட்டி மரம், பூமியில் விதைத்ததும், பெரிதாக வளர்ந்து வருவது போல், ஆணின் விந்துத்துளியில் ஒரு குட்டி மனிதன் மறைந்து கிடக்கிறான். விளை நிலமான கருவறையில் அக்குட்டி மனிதன் செலுத்தப் பட்டதும், அவன் அங்கு வளரத் தொடங்குகிறான். போதிய அளவு வளர்ச்சி பெற்றதன் பின்பு குழந்தையாக பிறக்கிறான் என ஒரு பெரும் அறிஞர்கள் கூட்டம் நம்பி வந்தது.

தாங்கள் கூறும் கருத்துதான் சரியானது என ஒவ்வொரு சாராரும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு வந்தனர். 18ம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில்தான் அதாவது சுமார் 1775-ம் ஆண்டில் ஸ்பல்லான் ஜானி (Spallanzani) என்பவர்தான் கரு உருவாக விந்தணுவும், சினை முட்டையும் அவசியம் என முதன் முதலில் கூறினார்.

இதற்கு பின் தோன்றிய வான் பெண்டென் (Van Beneden) என்ற அறிஞர், 1783-ம் ஆண்டு ஸ்பல்லான் ஸானியின் கூற்றை உறுதிபடுத்தினார். இதன் பிறகுதான், மாதவிடாய்தான் குழந்தையாக மாறுகிறது என்று கூறிவந்தவர்களும், விந்துவில் மறைந்துள்ள குட்டி மனிதன்தான் குழந்தையாக வளர்கிறான் என்று கூறி வந்தவர்களும் தங்களது கருத்தினை மாற்றி வாசிக்க ஆரம்பித்தார்கள்.

இதன்பின் 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றிய கருயியல் அறிஞர்கள், தக்க சான்றுகளுடன் விந்தணு, சினை முட்டையின் சேர்க்கையே கருவாகும் என்பதை சான்றுகளுடன் தெளிவுபடுத்தினார்கள். ஆக இருபதாம் நூற்றாண்டின் துவக்கம்வரை, குழந்தை எவ்வாறு உருவாகிறது என்பதை தெளிவான முறையில் அறிந்து கொள்ள முடியாமல் அறிவியல் உலகம் திணறிக்கொண்டிருந்த போது, 1430 வருடங்களுக்கு முன்பு இத்தகவல் குர்ஆனிலும், அக்குர்ஆனை நடை முறைப்படுத்தி போதனை செய்து வந்த இறைத் தூதர் நபி(ஸல்) அவர்களின் கூற்றிலும் இடம் பெற்றுள்ளதை நாம் வாசித்துப் பார்க்கும் போது வியப்பின் சிகரத்திற்கே சென்றடைந்து விடுகிறோம்.

விந்தணு-சினை முட்டையின் சேர்மத்தாலேயே மனிதன் படைக்கப்படுகிறான் என்ற உண்மை இடம் பெற்றிருக்கும் குர்ஆன் வசனத்தை இதோ! படித்துப் பாருங்கள்!

(إِنَّا خَلَقْنَا الْإِنْسَانَ مِنْ نُطْفَةٍ أَمْشَاجٍ نَبْتَلِيهِ فَجَعَلْنَاهُ سَمِيعاً بَصِيراً) (الانسان:2)

கலப்பான இந்திரியத்துளியிலிருந்து நிச்சயமாக மனிதனை நாமே படைத்தோம். அவனை நாம் சோதிப்பதற்காக அவனை கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் ஆக்கினோம் (76:2)

இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள கலப்பு விந்தணு என்பது விந்தணுவில் பல சேர்மங்கள் உண்டு என்பதை குறிக்கிறது என முந்திய தொடரில் குறிப்பிட்டிருந்தேன்.

கலப்பு விந்தணு என்பதற்கு வேறு அர்த்தமும் உண்டு. அதாவது சினை முட்டையுடன் சேர்ந்து இரண்டற கலந்து விட்ட விந்தணு. இக்கருத்தே பல குர்ஆன் விரிவுரையாளர்களின் கருத்தாகும்.

இதன் படி, விந்தணு சினைமுட்டையின் சேர்மத்தால்தான் மனிதன் படைக்கப்படுகிறான் என்ற உண்மை 1430 ஆண்டுகளுக்கு முன்பே குர்ஆனில் இடம் பெற்றுள்ளது.

இதைவிட தெளிவாக பின்வரும் வசனம் இக்கருத்தை விவரிப்பதைக் கவனியுங்கள்:

(يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى )(الحجرات: من الآية13)

மனிதர்களே! உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து நாம் படைத்தோம் (49:13)

மனித இனம் அனைத்தும் ஓர் ஆண், ஒரு பெண் சேர்க்கையில் படைக்கப்படுகிறது என்ற உண்மையை இந்த வசனம் தெளிவு படுத்துகிறது. அதாவது, குழந்தை உருவாக ஆண் - பெண் ஆகிய இருவரின் பங்களிப்பு அவசியம் என்பதை இவ்வசனம் விளக்கியுள்ளது.

இதே கருத்தினை இன்னும் தெளிவாக விவரித்திடும் நபி மொழிகள் ஏராளம் உண்டு. அவற்றில் அஹ்மதில் இடம் பெற்ற ஒரு செய்தியை இங்கே குறிப்பிடுகிறேன்.

عن عبد الله قال مر يهودي برسول الله صلى الله عليه وسلم وهو يحدث أصحابه فقالت قريش يا يهودي ان هذا يزعم انه نبي فقال لأسألنه عن شيء لا يعلمه الا نبي قال فجاء حتى جلس ثم قال يا محمد مم يخلق الإنسان قال يا يهودي من كل يخلق من نطفة الرجل ومن نطفة المرأة .... فقال هكذا كان يقول مَن قبلك رواه أحمد .

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது ஒரு யூதர் அவ்வழியே கடந்து சென்று கொண்டிருந்தார். யூதரே! இவர் தன்னை நபி எனக் கருதுகிறார் என குரைஷிகள் அந்த யூதரிடம் கூறினர்.

இறைத்தூதர்கள் தவிர வேறு யாரும் அறிய முடியாத ஒரு விஷயத்தை நான் அவரிடம் கேட்கப்போகிறேன் என்று கூறிய அந்த யூதர், நபி (ஸல்) அவர்களிடம் வந்து அமர்ந்து, முஹம்மதே! மனிதன் எதிலிருந்து படைக்கப்படுகிறான் என்று கேட்டார்.

விந்தணு-சினை முட்டை ஆகிய இரண்டிலிருந்துதான் மனிதன் படைக்கப்படுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறுதான் உங்களுக்கு முன்னிருந்த (இறைத்தூதுவர்களும் கூறி வந்தனர் என யூதர் கூறினார்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், நூல்: அஹ்மது.

விந்தணு - சினை முட்டை ஆகிய இரண்டும் இணைந்தே குழந்தை உருவாகிறது என்ற செய்தியை 1430 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் கூறியுள்ளார் எனில், நிச்சயமாக அவர் ஒரு சராசரி மனிதராக இருக்க முடியாது. மாறாக அவர் ஓர் இறைத்தூதர்தான் என்பதை இச்செய்தி உறுதி படுத்துகிறது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.

## சிந்திக்க சில வரிகள்...

இறைத்தூதர் அவர்களே! மறுமை நாளில் தங்களின் பரிந்துரைக்குத் தகுதி படைத்த மனிதர் யார்?' என்று நபி(ஸல்) அவர்களிடம் நான் கேட்டபோது, 'அபூ ஹுரைராவே! என்னைப் பற்றிய செய்திகளின் மீது உமக்கிருக்கும் பேராவல் எனக்குத் தெரியும். எனவே, இச்செய்தியைப் பற்றியும் உமக்கு முன்னர் யாரும் என்னிடம் கேட்க மாட்டார்கள் என நான் நம்பியிருந்தேன்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறிவிட்டு, 'மறுமை நாளில் மக்கள் அனைவரிலும் என் பரிந்துரைக்குத் தகுதி பெற்றவர் யாரெனில், உள்ளத்திலிருந்து - தூய்மையான எண்ணத்துடன் 'வணங்கி வழிபடுவதற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்று சொன்னவர்தாம்' என்று கூறினார்கள்" அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதன் அவன் நண்பனின் மார்க்கத்தின் மீது இருக்கிறான். ஆகவே உங்களில், ஒருவர் தாம் யாரிடம் நட்புக் கொள்கிறோம் என்பதைக் கவனித்துக் கொள்வீராக! (அபூதாவூது, திர்மிதி: அபூஹுரைரா(ரலி))

# மனைவி கணவனுக்கு செய்யும் கடமைகள் (பாகம் - 5)

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

கடந்த தொடர்களில் கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகள் பொறுப்புகள் பற்றி தெரிந்து கொண்டோம். இத்தொடரில் மனைவி கணவனுக்கு செய்யவேண்டிய கடமைகள் பற்றி தெரிந்து கொள்வோம்.

### 1. கணவனுக்கு கட்டுப்படுவது அவசியம்.

கணவனுக்கு மனைவி கட்டுப்படுவது அவசியமாகும். அல்லாஹ் ஆண்களை நிர்வாகம் செய்யக்கூடியவர்களாக படைத்திருக்கின்றான். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

(ஆண், பெண் இருபாலாரில்) அல்லாஹ் சிலரை சிலரைவிட மேன்மைப்படுத்தி வைத்திருக்கிறான். (ஆண்கள்) தங்கள் சொத்துகளிலிருந்து (பெண்பாலாருக்காகச்) செலவு செய்து வருவதினாலும், ஆண்கள் பெண்களை நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். எனவே நல்லொழுக்கமுடைய பெண்டிர் (தங்கள் கணவன்மார்களிடம்) விசுவாசமாகவும், பணிந்தும் நடப்பார்கள். (தங்கள் கணவன்மார்கள்) இல்லாத சமயத்தில், பாதுகாக்கப்படவேண்டியவற்றை, அல்லாஹ்வின் பாதுகாவல் கொண்டு, பாதுகாத்துக் கொள்வார்கள்;... (அல்குர்ஆன் 4: 34)

இப்னு கஸீர்(ரஹ்) அவர்கள் இந்த ஆயத்திற்கு விளக்கம் அளிக்கும்போது, இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களைத் தொட்டும் அலி(ரலி) அவர்கள் கூறியதாக குறிப்பிடுகிறார்கள், (ஆண்கள் நிர்வாகிகள் என்பதின் கருத்து, அவர்கள் தலைவர்கள் என்பதாகும், கணவனுக்கு கட்டுப்படும் விஷயத்தில் அல்லாஹ் ஏவிய விஷயங்களில் கணவனுக்கு கட்டுப்படுவாள் என்பதாகும்.) (தப்ஸீர் இப்னு கஸீர்).

(கணவன்மாராகிய) உங்களுக்கும் உங்கள் மனைவிமார்மீது பல கடமைகள் உண்டு இன்னும் உங்கள் மனைவிமாருக்கும் உங்கள்மீது பல கடமைகள் உண்டு என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

ஒரு பெண் ஐந்து நேரத்தொழுகைகளையும் தொழுது (ரமளான்) மாத நோன்பையும் நோற்று தன் கற்பையும் பாதுகாத்து தன் கணவனுக்கும் கட்டுப்பட்டு நடந்தால் சுவர்க்கத்தில் தான் விரும்பிய வாசலால் நுழைவாள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஹில்யா லிஅபீநயீம்)

### 2. உடலுறவு கொள்ள கணவனுக்கு முழுமையாக இடமளிப்பது.

திருமணமான நாளிலிருந்து கணவன் விரும்பும் நேரங்களில் தன் உணர்வுகளை தீர்த்துக் கொள்ள மனைவி முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இஸ்லாம் அனுமதித்த தக்க காரணங்களின்றி அதற்கு மறுப்புத் தெரிவிப்பது பெரும் குற்றமும் மலக்குகளின் சாபத்திற்குரிய செயலுமாகும். இஸ்லாம் அனுமதித்த காரணம் என்பது நோய், கடமையான நோன்பு நோற்றிருக்கும் நேரம், மாதவிடாய் மற்றும் பிள்ளைபேறினால் பெருந்தொடக்கான நேரங்கள் போன்றவையாகும். இப்படிப்பட்ட தக்க காரணங்களின்றி ஒரு மனைவி தன் கணவன் தன்னுடன் உறவு கொள்ள விரும்பும் போது மறுக்கக்கூடாது. அப்படி மறுத்தால் அப்பெண்ணுக்காக மலக்குகள் சாபம் இடுகின்றார்கள்

"கணவன் தன்னுடன் உறங்குவதற்காக மனைவியை அழைத்து அவள் அதை மறுத்து அதன் காரணமாக அவளின் மீது கோபம் உள்ளவனாக அவ்விரவை கணவன் கழித்தால் காலையாகும் வரை மலக்குகள் அப்பெண்ணுக்காக சாபமிடுகின்றார்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

சமையல் செய்து கொண்டிருக்கும் போது கணவன் தன் மனைவியை உறவு கொள்ள அழைத்தாலும் அதற்கு அவள் கட்டுப்பட வேண்டும் என்பது நபிமொழியாகும். முஹம்மதின் உயிர் எவன் வசம் இருக்கின்றதோ அவன்மீது ஆணையாக ஒரு பெண் அவளுடைய கணவனின் கடமையை நிறைவேற்றாத வரை தன் இறைவனின் கடமையை நிறைவேற்றியவளாக ஆகமாட்டாள். அவள் அடுப்பறையில் இருக்கும் போது அவளை உறவுகொள்வதற்காக (கணவன்) அழைத்தாலும் அவள் அதற்கு மறுக்கக்கூடாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், இப்னுமாஜா)

### 3. கணவன் விரும்பாதவரை வீட்டிற்குள் வர அனுமதி வழங்கக்கூடாது.

கணவன் இருக்கும் போது அவனுடைய அனுமதியின்றி (சுன்னத்தான) நோன்பு நோற்பது மனைவிக்கு ஆகுமானதல்ல. இன்னும் கணவனின் அனுமதியின்றி அவனுடைய வீட்டிற்குள் யாரையும் அனுமதிக்கக்கூடாது... என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

இதில் பெண்கள் கவனம் செலுத்த வேண்டும், கணவன் இல்லாத நேரத்தில் வீட்டிற்கு வரக்கூடிய அந்நிய ஆண்களிடத்தில் கணவன் இல்லையென்ற பதிலை சொல்ல வேண்டுமே தவிர அவர்களை வீட்டிற்குள் வர அனுமதிக்கக்கூடாது. கணவன் வீட்டில் இருந்தாலும் அந்நிய ஆண்கள் இருக்கும் இடத்திற்கு சரளமாக சென்று பழகக்கூடாது. அதை கணவன் அனுமதித்தாலும் சரியே!

### 4. மனைவி கணவனுக்கு மாறு செய்யும் போது மனைவியை கண்டிக்கும் கடமை கணவனுக்கு இருக்கின்றது. அதை மனைவி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

எந்தப் பெண்கள் விஷயத்தில் - அவர்கள் (தம் கணவருக்கு) மாறு செய்வார்களென்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்;. (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களைப் படுக்கையிலிருந்து விலக்கிவிடுங்கள்;. (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களை (இலேசாக) அடியுங்கள். அவர்கள் உங்களுக்கு வழிப்பட்டுவிட்டால், அவர்களுக்கு எதிராக எந்த வழியையும் தேடாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்ந்தவனாகவும், வல்லமை உடையவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 4: 34)

கட்டுப்படாத மனைவியை திருத்தும் முறையை மேல்கூறிய வசனத்தில் அல்லாஹ் குறிப்பிட்டிருப்பது அப்பொறுப்பு கணவனுக்கு உள்ளது என்பது தெளிவாகின்றது. அவ்வாறே மனைவியும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

முஃமின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் (அல்குர்ஆன் 66: 6)

இப்னு கஸீர்(ரஹ்) அவர்கள் இந்த ஆயத்திற்கு விளக்கம் அளிக்கும் போது கதாதா(ரஹ்) அவர்கள் கூறிய விளக்கத்தை குறிப்பிடுகிறார்கள், அல்லாஹ்விற்கு கட்டுப்படும்படி ஏவுவதும் அல்லாஹ்விற்கு மாறுசெய்வதை விட்டும் தடுப்பதும் அல்லாஹ்வின் கட்டளைகளைக் கொண்டு அவர்கள் விஷயத்தில் நடப்பதும் அதைக் கொண்டு அவர்களுக்கு ஏவுவதும் அதை அவர்கள் செயல்படுத்துவதற்காக உதவிசெய்வதுமாகும். அவர்கள்

அல்லாஹ்விற்கு மாறுசெய்வதை கண்டால் கண்டிக்கவும் தடுக்கவும் வேண்டும், இதுதான் இந்த ஆயத்திற்குரிய விளக்கமாகும் என குறிப்பிடுகின்றார்கள்.

இவ்வாறே லஹ்ஹாக் மற்றும் முகாதில் என்னும் திருக்குர்ஆன் விரிவுரையாளர்களும் குறிப்பிடுகின்றார்கள், அதாவது, ஒரு முஸ்லிம் தன் குடும்பத்தாருக்கும் தன் அடிமைகளுக்கும் அல்லாஹ் அவர்களுக்கு கடமையாக்கியதையும் தடுத்தவைகளையும் கற்றுக்கொடுப்பது கடமையாகும்.

### 5 நல்ல காரியங்களில் கணவனுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்,

கணவர்களுக்குப் பெண்களிடம் இருக்கும் உரிமைகள் போன்று, முறைப்படி அவர்கள்மீது பெண்களுக்கும் உரிமையுண்டு; ஆயினும் ஆண்களுக்கு அவர்கள்மீது ஒருபடி உயர்வுண்டு. மேலும் அல்லாஹ் வல்லமையும் ஞானமும் மிக்கோனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 2: 228)

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் இந்த ஆயத்திற்கு விளக்கம் அளிக்கும் போது, "கணவனுக்கு கட்டுப்படுவது மனைவி மீது அவசியம் என்பது போல் நல்ல காரியத்தில் ஒத்துழைப்பதும் அவர்களின் கடமையாகும்"

### 6. தன் கணவனின் மானத்தையும் கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்:

எனவே நல்லொழுக்கமுடைய பெண் (தங்கள் கணவன்மார்களிடம்) விசுவாசமாகவும், பணிந்தும் நடப்பார்கள். (தங்கள் கணவன்மார்கள்) இல்லாத சமயத்தில், பாதுகாக்கப்பட வேண்டியவற்றை, அல்லாஹ்வின் பாதுகாவல் கொண்டு, பாதுகாத்துக் கொள்வார்கள். (அல்குர்ஆன் 4: 34)

### 7. கணவனின் அனுமதியின்றி கணவனின் பணத்திலிருந்து செலவு செய்யக்கூடாது.

ஒரு ஆண் அவனுடைய குடும்பத்திற்கு பொறுப்பாளன், அவன் அவனுடைய பொறுப்பை பற்றி (மறுமையில்) கேட்கப்படுவான், ஒரு பெண் தன் கணவனின் வீட்டில் பொறுப்புதாரி, அவள் அவளின் பொறுப்பு பற்றி (மறுமையில்) கேட்கப்படுவாள்... என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

எந்த ஒரு பெண்ணும் தன் கணவனின் வீட்டிலிருந்து (சொத்திலிருந்து) அவனின் அனுமதியின்றி செலவு செய்யக்கூடாது, அல்லாஹ்வின் தூதரே! உணவுப்பொருளையுமா என்று கேட்கப்பட்டது. அது எங்களின் பொருட்களில் மிகவும் மேலானது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

கணவன் (ஊரில்) இருக்கும் போது அவருடைய அனுமதியின்றி (சுன்னத்தான) நோன்பு நோற்பது மனைவிக்கு ஆகுமானதல்ல. கணவனின் அனுமதியின்றி அவரின் வீட்டில் (யாரையும்) மனைவி அனுமதிக்கக்கூடாது. கணவனின் அனுமதியின்றி மனைவி செய்யும் எந்த தர்மமும் அதனுடைய பாதி நன்மை கணவனை சென்றடையும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

### 8. குழந்தைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாக வளர்க்க வேண்டும்.

கணவன்மார் அதிகமாக வெளியிலேயே தங்களின் அதிக நேரங்களை கழிப்பார்கள். குழந்தைகளுடன் வீட்டில் அதிகமாக இருப்பவர்கள் தாய்மார்களே. அவர்கள்தான் குழந்தைகள் விஷயத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

### 9. கணவன் செய்யும் உபகாரங்களுக்காக நன்றி செலுத்த வேண்டும்.

ஹஜ்ஜுப் பெருநாள் அல்லது நோன்புப் பெருநாள் தொழுகைக்காக (பெருநாள் தொழுகை நிறைவேற்றப்படும்) திடலுக்கு நபி(ஸல்) அவர்கள் வெளியாகி சென்றார்கள், பின்பு பெண்கள் பகுதிக்கு சென்று, பெண்களே! நரகவாதிகளில் அதிகமானவர்களாக பெண்களை நான் காட்டப்பட்டேன் என்றார்கள், என்ன காரணத்தால் அல்லாஹ்வின் தூதரே! என அப்பெண்கள் கேட்டார்கள். நீங்கள் அதிகம் சாபமிடுகின்றீர்கள் கணவனின் உபகாரங்களை நன்றி மறக்கின்றீர்கள் ... எனக் கூறினார்கள். (புகாரி)

### 10. கணவனுக்கு உபதேசம் செய்ய வேண்டும்.

மார்க்க விஷயத்தில் கணவன் ஏதாவது தவறு செய்யக்கண்டால் அதை கணவனுக்கு சுட்டிக்காட்ட வேண்டும். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

நல்ல காரியத்திலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள் பாவத்தின் மீதும் பகைமையின்மீதும் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்காதீர்கள்.

### 11 கணவனிடம் தன்னை தலாக்கிடும்படி வேண்டுவதிலிருந்து ஒவ்வொரு மனைவியும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எந்தப் பெண்ணாவது தக்க காரணமின்றி தன் கணவனிடம் தன்னை தலாக்கிடும்படி கேட்டால் சுவர்க்கத்தின் வாடை அவளுக்கு ஹராமாகிவிடும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

### 12. மரியாதைக் குறைவாக தன் கணவரிடம் நடந்து கொள்ளக் கூடாது.

எந்தப் பெண்ணும் தன் கணவனை இவ்வுலகில் நோவினை செய்யக்கூடாது. அப்படி செய்யும்பட்சத்தில் அவருக்காக (மறுமையில் அல்லாஹ் ஏற்பாடு செய்து வைத்திருக்கும்) ஹூருல்ஈனான அவருடைய மனைவி கூறுவார், அல்லாஹ் உன்னை நாசமாக்குவானாக! அவரை நோவினை செய்யாதே, அவர் உன்னிடத்தில் ஒரு விருந்தாளியாக இருக்கின்றார். அவர் உன்னை விட்டும் பிரிந்து எங்களிடம் வரும் தருவாயில் இருக்கின்றார் என்று அந்த ஹூருல்ஈன் பெண் கூறுவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், திர்மிதி)

ஆகவே! அல்லாஹ் அனுமதித்த விஷயங்களில் உங்களின் கணவனின் திருப்தியை பெற முயலுங்கள் ஈருலக வெற்றியும் கிடைக்கும். அப்படிப்பட்டவர்களாக நம் அனைவரையும் அல்லாஹ் ஆக்கியருள்வானாக!

ஈருலக வெற்றியின் வழிகாட்டி
"சுவனப்பாதை"
சந்தா சேர்ந்து
பயனடையுங்கள்

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 6:10

### போட்டிக்குரிய கேள்விகள்

**1.உஹதுப் போரில் ஷஹீதாக்கப்பட்ட எந்த ஸஹாபியை மலக்குமார்கள் குளிப்பாட்டினார்கள்?**

A.ஹம்ஜா(ரலி)

B.ஹன்லலா(ரலி)

C.முஸ்அப்இப்னுஉமைர்(ரலி)

**2.கந்தக் போரினை எதிர்க்கொள்ள அகழ் தோண்ட ஆலோசனை வழங்கிய ஸஹாபி யார்?**

A.உமர்(ரலி)

B.ஸல்மான்(ரலி)

C.அபூபக்கர்(ரலி)

**3.அதிகமான ஹதீஸ்களை அறிவித்த ஆண் மற்றும் பெண் ஸஹாபிகள் யார்?**

A.இப்னு அப்பாஸ்(ரலி)மற்றும் ஆயிஷா(ரலி)

B.அபூஹுரைரா(ரலி) மற்றும் பாத்திமா(ரலி)

C.அபூஹுரைரா(ரலி) மற்றும் ஆயிஷா(ரலி)

**4.ஹிஜ்ரத் செல்லும்போது தன் முழுச்சொத்துக்களையும் மக்கத்து முஷ்ரிக்களிடம் விட்டுச்சென்ற அந்த ஸஹாபி யார்?**

A.பிலால்(ரலி)

B.ஸல்மான்(ரலி)

C.சுஹைப் ரூமி(ரலி)

**5.கிணற்றை ஒரு யூதரிடமிருந்து விலைக்கு வாங்கி மக்களுக்கு இலவசமாக தண்ணீர் வழங்கிய அந்த ஸஹாபி யார்?**

A.அபூதர்தா(ரலி)

B.அபுதல்ஹா(ரலி)

C.உஸ்மான்(ரலி)

அறிவுப் போட்டி - 6:9 க்கான பரிசு பெறுபவர் : எஸ். ஜமீல் – 050 280 3947

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

### விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

### அறிவுப் போட்டி - 6:9 க்கான விடைகள்

1) C) இன்ஜீல்

2) C) கடனை

3) A) சூரத்துல் கவ்ஸர்

4) B) பழ கருப்பையா

5) B) 2:286

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

*தொடர் - 38* *- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A*

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ مُنْكَرَاتِ الْأَخْلَاقِ وَالْأَعْمَالِ وَالْأَهْوَاءِ. (ترمذي)

யா அல்லாஹ்! கெட்ட ஆசைகள், கெட்ட செயல்கள் இன்னும் வெறுக்கத்தக்க குணங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். (திர்மிதி)

اَللّٰهُمَّ أَصْلِحْ لِيْ دِيْنِيْ الَّذِيْ هُوَ عِصْمَةُ أَمْرِيْ، وَأَصْلِحْ لِيْ دُنْيَايَ الَّتِيْ فِيْهَا مَعَاشِيْ، وَأَصْلِحْ لِيْ آخِرَتِيْ الَّتِيْ فِيْهَا مَعَادِيْ، وَاجْعَلِ الْحَيَاةَ زِيَادَةً لِيْ فِيْ كُلِّ خَيْرٍ، وَاجْعَلِ الْمَوْتَ رَاحَةً لِيْ مِنْ كُلِّ شَرٍّ. (مسلم)

யா அல்லாஹ்! என்னுடைய மார்க்கத்தை எனக்கு நீ சீர்படுத்துவாயாக! (ஏனெனில்) அதுதான் எனது அரண். எனது உலகை எனக்குச் சீர்படுத்துவாயாக! (ஏனெனில்) அதுதான் நான் வாழுமிடம். எனது மறுமையைச் சீர்படுத்துவாயாக! (ஏனெனில்) அதுதான் நான் திரும்பிச் செல்லுமிடம். எனது வாழ்க்கையில் அதிக நன்மைகள் புரிவதற்கு வாய்ப்பளிப்பாயாக! அனைத்து கெடுதிகளை விட்டும் விடுபட்டதாக எனது மரணத்தை ஆக்கியருள்வாயாக! (முஸ்லிம்)